கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் (வடமாகாணம்)
கைதடி

சுற்றறிக்கை 01/2013

சகல பலநோக்குகூட்டுறவு சங்கங்களினதும்,
சகல பனதென்னைவள கூட்டுறவுசங்கங்களினதும்,
சகல 2ம் படி கூட்டுறவுசங்கங்களினதும்
தலைவர்கட்கு,

**சகல பலநோக்குகூட்டுறவு சங்கங்கள், சகல பனதென்னைவள கூட்டுறவுசங்கங்கள், சகல 2ம் படி கூட்டுறவு சங்கங்களின் இயக்குனர்சபை உறுப்பினர்களுக்கும் பொதுச்சபை உறுப்பினர்களுக்குமான படிகளும் மற்றும் பிரயாணச் செலவுகளும்.**

மேற்படிவடமாகாணத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள், 2ம் படி கூட்டுறவுசங்கங்களின் இயக்குனர்சபை கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் இயக்குனர் சபை உறுப்பினர்களின் படிகளும், பொதுச்சபை கூட்டங்களுக்கு கலந்துகொள்ளும் பொதுச்சபை உறுப்பினர்களு(பேராளர்கள்)க்கான படிகளும், பிரயாணச்செலவுகளும் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றன.

1. இயக்குனர்படி :

1. (1) இயக்குனர் சபை கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இயக்குனர் சபை உறுப்பினர்கட்கு உணவுப்படிகள் உட்பட மாதமொன்றுக்கு உச்சஎல்லை ரூ1200/= ற்கு மேற்படாதவாறு, கூட்டமொன்றிற்கு ரூ400/= ற்கு மேற்படாத வீதத்திற்கு,ஆகக்கூடியது 3கூட்டங்களுக்குரிய படியினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

1. (2) இலாபத்திலியங்கும் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு சங்கங்களின் இயக்குனர் சபை கூட்டங்களுக்கு ரூபா 100/= வீதமான படியொன்றினை மாதமொன்றுக்கு உச்ச எல்லை ரூபா 300/= ற்கு மேற்படாதவாறு 3 கூட்டங்களுக்குரிய படியினை மேலதிக இயக்குனர்படியாக பெற்றுக் கொள்ளமுடியும். அந்தந்த மாத இலாபம் கணிக்கும்போது கிராமிய வங்கிப்பகுதிலாபத்தினை கணக்கில் எடுக்காமலும், மொத்த மேலதிகத்திலிருந்து மொத்த குறைவுகளை கழித்தும்,(சகல செலவுகளும், அட்டுறு செலவுகளும்) கணக்கில் உள்வாங்கப்பட்டிருக்கவேண்டும். கணக்காளரால் கணக்குகள் உறுதிப்படுத்தப்பட்டு சங்கம் மீதிலாபத்தில் இயங்குவதை இயக்குனர்சபை ஏற்றுக்கொண்ட பின்னரே இப்படியை வழங்கமுடியும்.

1. (3) இப்படியினைப் பெற்றுக்கொள்வதற்கு இயக்குனர்கள் 2மணித்தியாளங்களுக்கு குறையாமல் இயக்குனர் சபை கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும்.

1. (4) இயக்குனர் சபை கூட்டங்களுக்கு கலந்துகொள்வதற்காக அவரால் பொதுவாகனங்களில் பிரயாணம் செய்வதற்கு நேர்ந்த தொகையை பிரயாணசெலவாக இயக்குனர் பெற்றுக் கொள்ளமுடியும். சொந்தவாகனம் வைத்திருக்கும் இயக்குனர் ஒருவருக்கு மோட்டார்சைக்கிளுக்கு 1கி.மீ.க்கு /ஒருவழிக்கு 5 ரூபா வீதமும் அல்லது கார்மற்றும் ஏனைய 4 சில்லு வாகனங்களுக்கு 1கி.மீ.க்கு/ஒருவழிக்கு 10ரூபா வீதமும பெற்றுக்கொள்ள

முடியும். சொந்த வாகனம் வைத்திருக்கும் இயக்குனர் அவ்வாகனம் அவரது பெயரிலே பதிவும், அனுமதிப்பத்திரமும் இருப்பதை இயக்குனர்சபையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

1. (5) இவ்வியக்குனர் சபை படியினை இயக்குனர் சபை கூட்டத்திற்கு கலந்துகொள்ளும் தலைவரும் பெற்றுக்கொள்ளலாம்.

2. பொதுச்சபை உறுப்பினர்கள்(பேராளர்கள்) படி :

2. மேற்குறித்த வகை கூட்டுறவு சங்கங்களின் பொதுச்சபை கூட்டங்களில் பங்குபற்றும் பேராளர்களுட்கு ரூபா 300/= படி யொன்றினைப் பெற்றுக்கொள்ளமுடியும். மேற்படி திருத்தப்பட்ட படிகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கிய நடைமுறை விதிகள் பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் செல்லுபடியாகும். இக் கொடுப்பனவுகள் 01.08.2013 ந் தேதியில் இருந்து நடைமுறைக்கு வருவதுடன், இத்திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட 06/2007 இலக்க 28/9/2007ந் தேதிய சுற்றுநிருபம் இரத்துசெய்யப்படுகின்றது.

3. இயக்குனர்கள் சங்கம் தொடர்பான விடயங்களுக்கு கலந்து கொள்வதற்கான இணைந்த படிகளும்,பிரயாண படிகளும்.

3. (1) சங்கம் தொடர்பான விடயங்களுக்கு சங்கத்தொழிற்பரப்புக்கு வெளியே போகவர 12 கி.மீ அப்பால் 6மணித்தியாளத்திற்கு மேல் 12 மணித்தியாலத்துள் செலவழிக்க நேரிடின் இணைந்தபடி 400/= இன் அரைப்பங்கினையும் 12 மணித்தியாலங்களுக்கு மேல் முழு இணைந்தபடி 400/= இனையும் அத்துடன் பொது போக்குவரத்துக்கான பிரயாணப்படியினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

திருமதி.மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச்சங்கப்பதிவாளரும் (வ.மா)

பிரதி : (1) கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்.
(2) அதிபர் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்.